**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்ட அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திறனான பங்களிப்பாளர்கள் மற்றும் விவசாய ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிப் பொறுப்பு காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் | 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஓய்வூதியத் திட்ட முறைமையானது சுய நிதியினை | ஓய்வூதியப் பொறுப்பினை காப்பீட்டுக் கணப்பு மதிப்பீட்டின் பிரகாரம் காலரீதியாக கணிப்பீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்ச்சியாக அவ்வாறான காப்பீட்டு கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 74,155,908,494 ஆகும். மேலும் இக்கடப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையாகக் கொண்டிருக்காததனால் எதிர்காலத்தில் இத்திட்டத்தை மீள் கட்டமைப்புச் செய்து முறைப்படியாக பொறுப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| பங்களிப்பாளர்கள் ஓய்வூதியத்திற்காகக் கட்டுப்பட்ட திகதி மற்றும் தகைமை பெறும் திகதி என்பவற்றை உள்ளடக்கிய பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியல், செயற்திறனான பங்களிப்பாளர்களின் மாதாந்த பங்களிப்பு பணத்தின் பெறுமதி, தகைமை பெறும் உறுதிப்பத்திரம் செயற்படாற்றுள்ள பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியல் என்பவற்றை நாளதுவரையாக்கி பேணப்படாமையின் காரணமாக பங்களிப்பு, பணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டில் பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 96,476,139 மாத்திரம் காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நிதிப் பெறுவனவு களுக்குரிய தகவல்களுக்காக உரிய முறையில் பேரேட்டுக் கணக்கு பேணப் படுகின்றது. மாதாந்தம் நாளதுவரையாக்கப் படுகின்ற ஓய்வூதியப் பெயர்ப் பட்டியலை கணனி முறைமை யினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். திட்டத்தில் பங்களிப்பை பெற்றுள்ள பங்களிப்பாளர்களின் தகவல்களை கணனி முறைமையினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். தவணைப் பணத்தை கணனி மயப்படுத்துவதில் தாமதம் இடம்பெற்றுள்ளதனால் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களை முறைமையினூடாக பெற்றுக் கொள்வது சிக்கலானதாக உள்ளது. இந்நிலைமைக்கு முகங் கொடுத்ததன் பின்னர் தவணைப் பணத்தை சுயமாக கணனி மயப்படுத்துவதற்காக அரசாங்க வணிக வங்கியின் மூலம் தவணைப் பணத்தை அறவீடு செய்து அந்த தவணைப் பணத்தை நாங்கள் தரவு | ஓய்வூதியப் பங்களிப்பாளர் களின் நாளதுவரையாக பேணப்பட வேண்டியதுடன் பங்களிப்பு பணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முறைமைக்கு தொடர்புபடுத்தும் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பங்களிப்பாளர்களால் உறுதியாகச் செலுத்தப்பட்ட பணத்தை தவணைப் பண வருமானமும் தவணைப் பண வருமானத்தினுள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| திட்டத்தின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 78,198,513,683 மறை மீதியாக இருந்ததுடன், நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 5,028,075,667 ஆக இருந்தது. மேலும் 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் பணிப்புரையின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தும் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தல் 1987 மே 07 ஆந் திகதிய 452/12 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் பங்களிப்பு முறையே ரூபா 21,495,773 மற்றும் ரூபா 19,316,409 தொகைகளாக இருந்ததுடன் | இதற்கான ரூபா 750 மில்லியன் ஆரம்ப மூலதனம் முழுமையாகக் கிடைக்காமை, தவணைப் பணத்தை அதிகரிக்காது அடிக்கடி நலன் ரூபா 200 இலிருந்து ரூபா 1,000 வரை அதிகரித்தல், 1995 அரசாங்க கொள்கைக்கு இணங்க மனைவிக்கு ஓய்வூதியம் செலுத்துவதனை ஆரம்பித்தல், ஆகிய விடயங்கள் தாக்கமளித்துள்ளன. 2014 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட புதிய வர்த்தமானியுடன் உருவாகிய எதிர்கால கடப்பாட்டிற்காக 2015 பாதீட்டின் மூலம் ரூபா 5 மில்லியன் தொகையான திறைசேரி பிணை முறிகளை ஆரம்பமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும், அந்நிதி சபைக்கு கிடைத்திருக்காததுடன் வருடாந்த ஓய்வூதியப் பொறுப்பு மாத்திரம் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தது. போதியளவு | திட்டத்தை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஒய்வூதியக் கொடுப்பனவு முறையே ரூபா 3,217,332,522 மற்றும் ரூபா 4,502,560,108 ஆக இருந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரித்தமையின் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 3,065,000,000, ரூபா 4,450,949,000 தொகைகள் திறைசேரியின் மூலம் கிடைத்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இன்றி திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது. | முதலீட்டினைக் கட்டியெழுப்புவதற்காக பொதுத்திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| (i) 4 ஆம் பிரிவு | நிர்ணயிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு தமது தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத நிரந்தரமாக, அரைகுறையாக அல்லது முழுமையாக இயலாமைக்கு உள்ளாகுகையில் பொருளாதார ரீதியாக ஏதாவது முன்னேற்றம் பெறுவதற்கு படிகளைச் செலுத்துதல், மரணத்தின் போது மரணப் பணிக்கொடையைச் செலுத்துதல் மற்றும் 60 வயதினை பூர்த்தி செய்கையில் ஓய்வூதியம் செலுத்தும் | தவணைப் பணத்தை அதிகரிக்காது அரசாங்க கொள்கைகள் மற்றும் தீர்மானத்தின் அடிப்படையில் நலன்களை அதிகரித்ததனால் 1987 இல் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் 2010 ஆம் ஆண்டளவில் நிதியம் பூச்சியமாகியதால் திட்டத்திற்குச் சேர்த்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளதனால் புதிய ஆட்சேர்ப்புக்களை ஆரம்பிப்பதற்காக தேவையான | திட்டத்தை செயற்பாடுள்ளதாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிக்கோளுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை திட்டத்திற்கு அங்கத்தவர் எவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது 2014 இன் 1853/49 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் புதிய ஆட் சேர்ப்புக்களை ஆரம்பிப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் மேலும் அது சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவதற்காக பிரதி திறைசேரி செயலாளரின் தலைமைத்துவத்துடனான ஒரு நிபுணத்துவக் குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் சிபார்சுக்கு இணங்க புதிய ஆட்சேர்ப்புக்களை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. | |
| (ii) | 6(i) ஆம் பிரிவு | 60 வயது பூர்த்தியடைந்த நாளிலிருந்து அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த வேண்டிய போதிலும் ஓய்வூதியம் செலுத்த வேண்டிய திகதியிலிருந்து அல்லாது ஓய்வூதியம் தயாரித்த திகதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் அக்காலப்பகுதியில் செலுத்த வேண்டிய நிலுவையான ஓய்வூதியத்திற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 திசெம்பர் 31 வரை 8 ஆண்டுகளுக்காக 125,828 விவசாயிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலுவையான ரூபா 3,745,948,105 கூட்டு மொத்தமான | ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு காத்திருக்கும் பட்டியலிலுள்ள 20,000 இற்கும் அதிக விவசாயிகள் எண்ணிக்கையை ஏடுகளில் பதிய வேண்டி ஏற்பட்டதன் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிலுவைப் பணம் ஏற்படாத வகையில் ஓய்வூதியத்திற்கு தகைமை பெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே ஏடுகளுக்கு கொண்டு வரப்படுவதனால் செலுத்த வேண்டிய நிலுவையான | 60 வயதினைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து விவசாயிகள் ஓய்வூதியம் செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியத்தை திறைசேரி நிதி ஏற்பாட்டினைப் பெற்று முறைப்படியாக செலுத்துவதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. | |
| (iii) | 15(2) மற்றும் (3)ஆம் பிரிவு | பங்களிப்பாளர் பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது தவணைப் பணத்தை முறைப்படியாக செலுத்தாமையின் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்வதற்காக அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தெரிவித்தல் செய்யப்படாமையின் காரணாக 60 வயதினைப் பூர்த்தி செய்த ஓய்வூதியம் பெறுவதற்குத் தகைமையுள்ளது எனக் கருதி 1451 நபர்களால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பங்களிப்பாளர்கள் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறுவார்களாயிருந்தால் பங்களிப்பு இரத்துச் செய்யப்படும் என திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற சந்தர்ப்பத்திலேயே அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பணம் குறிப்பு புத்தகத்திலும் சான்றிதழ் உறுதிப் பத்திரத்திலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பங்களிப்பினை இரத்துச் செய்கின்ற விவசாயிகளின் செலுத்திய தவணைப் பணம் அவர்களின் 60 வயது பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் வட்டியுடன் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தவணைப் பணத்தை முறைப்படியாக செலுத்தாததன் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (iv) | 20 ஆம் பிரிவு | தோற்றுவிக்கப்பட்டுள்ள ஆலோசனைத் தெரிவுக் குழுவினால் அமுல்படுத்தப்பட வேண்டிய அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு ஆலோசனைத் தெரிவுக்குழு கூட்டப்பட | ஓய்வூதியத் திட்டத்திற்காக ஆட்சேர்ப்புக்களை ஆரம்பித்து செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனை தெரிவுக் குழு கூட்டப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டிய போதிலும் 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்றுவரை தெரிவுக்குழு கூட்டப்பட்டிருக்கவில்லை. | வருவதுடன் அதற்கிணங்க மிகவும் விரைவாக ஆலோசனை தெரிவுக் குழுவினைக் கூட்டுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 67,897,112 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 58,984,104 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 126,881,216 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு திறைசேரி மானியம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,397,949,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டத்தையும் பழைய திட்டத்தையும் ஒப்பீடு செய்த போது புதிய திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கின்ற நலன்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதனால் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தில் புதிய திட்டத்தை நாளதுவரையாக்குதல் மற்றும் புதிய சமூக பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை இச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தை நாளதுவரையாக்கி புதிய ஆட்சேர்ப்புக்களை ஆரம்பிப்பதற்கும் அதனை அமுல்படுத்தும் போது புதிய தொழில்நுட்ப முறைமையை ஈடுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டு தற்பொழுது அது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. | திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் சனவரியிலிருந்து ஒக்தோபர் வரை அண்ணளவாக 161,000 விவசாய ஓய்வூதியக்காரர் களுக்காக ரூபா 3,809,491,790 பணம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் 14 மாவட்ட கணக்கு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை செலுத்தப்படாத ஓய்வூதியம் ரூபா 76,019,485 தொகை சபைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாமைக்கு அடிப்படையான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கும் தகைமை பெறாத ஓய்வூதியக்காரர்கள் தொடர்பாக தகவல்களைக் கோரி தற்பொழுது உயிர் வாழவில்லையாயின் ஓய்வுபெறுவோர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | கொரோன இன்னல்களின் காரணமாக வெளி மாகாணங்களுக்குச் சென்று மீண்டும் வீடுகளுக்கு வருகை தர முடியாமல் நீண்ட காலம் அந்த இடங்களில் தங்கி இருக்க வேண்டி ஏற்பட்டமையின் காரணமாக ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு முடியாமையினால் இந்நிலைமை உருவாகியுள்ளது. 06 மாதங்கள் அளவிலான காலம் ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளாத ஓய்வூதியக் காரர்களின் விபரம் ஒப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அவர்களை ஓய்வூதியம் செலுத்தும் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதியக் காரர்களின் பெயர்ப் பட்டியலை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |
| (இ) | 1992 - 2002 வரையான காலமாக முன் கொண்டு வரப்பட்டுக் காணப்படுகின்ற வைப்புச் செய்யப்பட்ட எனினும் தேறப்படாத 3 வங்கி கணக்குகளுக்குரிய ரூபா 1,179,624 பெறுமதியான 117 காசோலைகளை மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 சனவரி 22 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட 509/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் இந்நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விடயத்தை ஆராய்ந்து பார்த்து தேறப்படாத காசோலைகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ஈ) | 2014 சனவரியிலிருந்து அமுல்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் பங்களிப்புத் தகவல்களை | ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்ட விவசாய பங்களிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கிய முறைமைகளை நாளதுவரையாக்குவதனைக் குறிக்கோளாகக் கொண்டு ரூபா 1,726,875 தொகை செலவு செய்து 08 மாவட்டங்களில் மாத்திரம் மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் ஏனைய மாவட்டங்களில் மீளாய்வு நடவடிக்கையை மேற்கொண்டு தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்றதாக மாறியிருந்ததுடன் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட விவசாய பங்களிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கும் நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நாளதுவரையாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் போது தகவல்களைச் சமர்ப்பித்திருந்த விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்த எண்ணிக்கையைக் கொண்டிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை மாவட்ட மட்டத்தில் கணனிமயப்படுத்தி நாளதுவரையாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்காக விவசாயிகளின் பிரதிபலிப்புக்கள் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததனால் மீளாய்வு நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | விவசாயி பங்களிப் பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கிய முறைமையை நாளது வரையாக்குதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓய்வூதியங்களைத் தயாரிப்பதற்காக 7,402 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 1,837 விண்ணப்பங்களுக்கு நலன்களை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓய்வூதியங்களைத் தயாரிப்பதற்காக 7,402 விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் உச்ச அளவு வினைத்திறனுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் காரணமாக விண்ணப்பங்களின் அளவினை 1000 இனை விடக் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது. எதிர்காலத்தில் தாமத மின்றி ஓய்வூதியங்களை | விவசாய மக்களுக்கு விரைவாக நலன்களை வழங்குதல் வேண்டும். |

வழங்குவதற்காக தேவையான முயற்சிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் புதிய தொழில்நுட்ப முறைமையினைப் பயன்படுத்தி கணனி முறைமையினை மாவட்ட அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு துரித சேவைகளை விவசாய மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.